# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2316/13 - 2023 ජනවාරි මස 24 වැනි අඟහරුවාදා - 2023.01.24

*2316/13 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டம்**

*2022 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 25இ பிரிவின் (8) ஆம் உப பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் டொன் ரஞ்சித் சிசிரகுமார ஹப்புஆரச்சி ஆகிய நான், இப்பிரிவின் நோக்கத்திற்காக, இக்கட்டளை மூலம் இத்தால் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட நிதிச் சேவை விநியோகத்தின் மீதான பெறுமதிசேர் வரி (இதனகத்துப் பின்னர் நிதிச் சேவைகள் வழங்குகை மீதான பெ. சே. வ. எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொடர்பில் வரி கணிக்கப்படும் விடயங்கள் மற்றும் அதன் இயல்பு தொடர்பில் குறிப்பீடு செய்கின்றேன்.*

*2014, யூன் மாதம் 23 ஆந் திகதிய 1868/10 ஆம் இலக்கமுடைய வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள், இச் சுற்றறிக்கை அமுல்படுத்தப்படும் 2022, ஒற்றோபர் 01 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்படும் என்பதுடன் இவ் ஒழுங்குவிதிகள் அத்திகதி முதல் செயற்பாட்டிற்கு வரும்.*

**தொன் ரஞ்சித் சிசிரகுமார ஹப்புஆரச்சி,**
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

கொழும்பு,
*2023, சனவரி 23.*


1A - G 38639 — 07 (2023/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*(1)* நிதிச் சேவைகளின் மீதான பெறுமதிசேர் வரி நோக்கத்திற்காக, மொத்த பெறுமதிசேர்ப்பினைக் கணிப்பீடு செய்தல்

*(அ)* *2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 25இ (1) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட நிறுவனம் அல்லது எவரேனும் நபர், பொருளாதாரத் தேய்மானம் (பின்வரும் பந்தி (ஆ) இன் கீழ் வழங்கப்பட்டுள்ளவாறு கணக்கிடப்பட்டது), அனைத்து ஊழியர்களுக்கும் செலுத்தப்படற்பாலதான வேதனாதிகளுக்கான சீராக்கல் மற்றும் பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் அத்தியாயம் III அ இன்படி செலுத்தப்படற்பாலதான நிதிச் சேவைகளின் விநியோகத்தின் மீதான பெறுமதிசேர் வரிக்கான சீராக்கங்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின் (ச. பா. உ. அ. சட்டம்) இரண்டாவது அட்டவணையின் 3 ஆம் விடயத்தின் (அ) உப விடயத்தின் பிரகாரம் செலுத்தப்படற்பாலதான நிதிச் சேவைகள் வழங்குகை மீதான சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டின் (ச. பா. உ. அ.) சீராக்கங்களுக்கு உட்பட்டு ஏற்றுக்கொள்ளத்தக்க கணக்கீட்டு நியமங்களின் (அவ் வரியிடற்பாலதான காலப்பகுதியிலுள்ள) பிரகாரம் கணிக்கப்பட்ட இலாபங்களின் மீதான வருமானவரிக் கொடுப்பனவிற்கு முன்னரான தேறிய இலாபங்கள் அல்லது நட்டங்கள் என்பவற்றின் ஒன்றில் அடங்குகின்ற அதன் பெறுமதி சேர்ப்பின்மீது ஒவ்வொரு வரியிடற்பாலதான காலப்பகுதிக்கும் பொறுப்புடையதாதல் வேண்டும்.*

*(2012.01.01 இலிருந்து பயன்வலுப்பெறும் வகையில், நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களை ஏற்றுக்கொள்ள தேவைப்படுத்தப்படும் குறிப்பிடப்பட்ட நிறுவனம் அல்லது எவரேனும் ஆள், மேற்கூறப்பட்ட தேவைப்பாட்டிற்கு இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின்படி* (SLFRS), *கணிப்பீடு செய்யப்பட்ட தொழிற்பாட்டு இலாபத்தினைக் கணக்கில் சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.)*

*(ஆ)* பொருளாதார பெறுமானத் தேய்வு

(i) வீதங்கள்

*அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டு 2009.06.19 ஆந் திகதிய 1606/30 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட பொருளாதார பெறுமானத் தேய்வு வீதங்கள் பின்வருமாறு;*

| *சொத்து* | *வீதம் (வருடாந்தம்)* |
|---|---|
| கணனி மென்பொருள் உள்ளடங்கலான தரவு நிரற்படுத்தல் உபகரணமும் துணைப்பொருட்களும் | *25%* |
| மோட்டார் வாகனங்கள் | *20%* |
| ஏனைய இயந்திரங்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் தளபாடங்கள் அல்லது பொருத்துதல்கள் | *12 1/2%* |
| தொட்டுணராச் சொத்துக்கள் (நற்பெயர் தவிர) | *10%* |
| கட்டிடங்கள் | *6 2/3%* |

(ii) *பொருளாதார பெறுமானத் தேய்வுக் கூற்றானது முழு ஆண்டுக்குமாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும். இத்தகைய பெறுமானக் குறைவு வீதங்கள் கிரய மற்றும் நேர்கோட்டு முறையின் (சமமான தவணைக் கட்டண முறை) அடிப்படையில் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். பெறுமானத் தேய்வுக் கொடுப்பனவுகள்மீது உள்நாட்டு இறைவரிச் சட்டத்தினால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் ஏற்புடையதாகாது.* SLFRS *இன் பின்பற்றலின் பின்னர், சொத்துக்களின் வகையிடலானது* SLFRS *இன் அடிப்படையில் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும்* SLFRS *இன் பின்பற்றலுக்கு முன்னர் கொள்ளல் செய்யப்பட்ட ஏதேனும் சொத்து தொடர்பில் முன்னதாக பின்பற்றப்பட்டு வந்த வகையீடானது பொருளாதார பெறுமானத் தேய்வினைக் கணிப்பீடு செய்வதில் தொடர்ந்தும் பின்பற்றப்படுதல் வேண்டும்.*

(iii) *2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டம் அல்லது 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வியாபாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆளின் குத்தகை இருப்பினுள் மேற்படி சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கும் ஏதேனும் சொத்துடன் தொடர்புடைய பொருளாதார பெறுமதி குறைவாக இருக்கக் கூடியவற்றிற்கு கழிப்பனவுகள் எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாது.*

(இ) ‘‘செலுத்தத்தக்க வேதனாதிகள்’’ என்பது, அனைத்து ஊழியர்களுக்கும் செலுத்தத்தக்க உழைப்பூதியத்தினைக் குறிக்கின்றது.

‘‘மொத்த உழைப்பூதியம்’’ என்பது, அனைத்து ஊழியர்களுக்கும் செலுத்தத்தக்க, பணம் மற்றும் பணமல்லா வடிவிலான நன்மைகளின் மொத்தக் கூட்டுத் தொகையினையும் தொழிற்பாட்டு இலாபத்தினை அடையப் பெறுவதற்கான வருமானக் கூற்றில் அறவிடப்படுகின்ற ஏதேனும் கொடுப்பனவு, பங்களிப்பு அல்லது சேவை முடிவுறுத்தலின் போது வழங்கப்படும் பயன்களுடன் தொடர்புடைய ஏற்பாடுகள் என்பவற்றின் மொத்தக் கூட்டுத் தொகையினையும் குறிக்கின்றது.

(ஈ) மொத்தப் பெறுமதி சேர்ப்பு

| | | |
|---|---|---|
| தேறிய இலாபம் அல்லது நட்டம் (வருமான வரிச் செலவுகளுக்கு முன்னர்) | | XXX |
| ***கூட்டுக :*** வருமானக் கூற்றில் அறவிடப்பட்ட நிதிச் சேவைகளின் | | |
| வழங்கல் மீதான பெசேவ மற்றும் ச. பா. உ. அ. | XX | |
| வருமானக் கூற்றில் அறவிடப்பட்ட தேய்மானம் | XX | |
| செலுத்தத்தக்க வேதனாதிகள் | XX | XXX |
| | | XXX |
| ***கழிக்குக :*** பொருளாதார பெறுமானத் தேய்வு | | (XX) |
| வரிக்கு முந்திய மொத்தப் பெறுமதி சேர்ப்பு | | XXX |
| ***கழிக்குக :*** பெ. சே. வ சட்டத்தின் அத்தியாயம் III அ இன்படி செலுத்தத்தக்க பெசேவ | | (XX) |
| ச. பா. உ, அ. சட்டத்தின் இரண்டாவது அட்டவணையின் 3 ஆம் விடயத்தின் (அ) உப விடயத்தின் பிரகாரம் செலுத்தத்தக்க ச. பா. உ. அ. | | (XX) |
| மொத்தப் பெறுமதி சேர்ப்பு | | XXX |

[பெ. சே. வ. சட்டத்தின் 25 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தில் செலுத்தத்தக்க நிதிச் சேவைகளின் மீதான பெ. சே. வ. (நிதிச் சேவைகளின் வழங்கல் மீதான பெ. சே. வ.) மற்றும் ச. பா. உ. அ. சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தில் செலுத்தத்தக்க நிதிச் சேவைகளின் மீதான ச. பா. உ. அ. (நிதிச் சேவைகளின் வழங்கல் மீதான ச. பா. உ.அ.]

(2) நிதிச் சேவைகளின் வழங்கல் மீதான பெ. சே. வரியின் கணிப்பீடு

(a) எவரேனும் பதிவு செய்துள்ள ஆளொருவர் நிதிச் சேவையின் வழங்குகை மற்றும் இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட நிதிச் சேவைகள் அல்லது பேணுகின்ற 25இ(5) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள (இதனகத்துப் பின்னர் நிதிசார் நடவடிக்கைகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) செயற்பாடுகளுக்கு தனித்தனியாக கணக்குகளைத் தயாரித்து பேணிவருவதுடன் அத்தகைய கணக்குகள் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 120 ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப் பெற்ற கணக்காளரினால் சான்றுப்படுத்தப்படுகின்றதாயின், அத்தகைய நடவடிக்கைகளின் பெறுமதி சேர்ப்பானது, வேறாக கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(b) அத்தியாயம் III அ இன் கீழ் நிதிச் சேவைகளின் வழங்குகைகள் மீது பெ. சே. வரியினைச் செலுத்துவதற்கு பொறுப்புடைய எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர், நிதிசார்பற்ற சேவைகளுக்கு தனியான கணக்குகளைப் பேணாதுவிடின், அத்தகைய ஆள் விகிதாசார அடிப்படையில் பெறுமதி சேர்ப்பினைக் கணிப்பீடு செய்வதற்கு தேவைப்படுத்தப்படுகின்றார். அத்தகைய தேவைப்பாட்டிற்கு, இலாபங்களின் கணிப்பீட்டில் மற்றும் புரள்வின் கணிப்பீட்டில் பெருமளவில் வித்தியாசம் காணப்படவில்லை எனில், நிதிசார்பற்ற சேவைகளுக்கு சாற்றத்தக்க பெறுமதி சேர்ப்பானது அந்த மாதத்தின் மொத்த புரள்வின் அதே மாதத்தின் நிதிசார்பற்ற சேவைகளின் புரள்வின் அதே விகிதமாக கொள்ளப்படும்.

நிதிசார் நடவடிக்கைகளுக்கான பெறுமதி சேர்ப்புக் கணிப்பீடு பின்வருமாறு மேற்கொள்ளப்படும் ;

$$\text{நிதிச் சேவைகளுக்கான சாற்றத்தக்க பெறுமதிசேர்ப்பு} = \text{மொத்தபெறுமதி சேர்ப்பு} - \left\{ \text{மொத்த பெறுமதி சேர்ப்பு} \times \frac{\text{நிதிசார்பற்ற சேவைகளின்மீதான புரள்வு}}{\text{வருமானக் கூற்றின்படியான மொத்தப் புரள்வு}} \right\}$$

(மொத்தப் பெறுமதி சேர்ப்பானது, இந்த அட்டவணையின் விடயம் 2(ஈ) இன்படி கணிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி சேர்ப்பினைக் குறிப்பிடுகின்றது)

(3) வருடாந்த விபரத்திரட்டுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :

பின்வரும் ஆவணங்கள் 25ஆ ஆம் பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட விபரத்திரட்டின் சமர்ப்பித்தலை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, 25இ(1) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சீராக்கல்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) குறித்த காலப்பகுதிக்குரிய கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் கூற்று.

(ஆ) குறித்த காலப்பகுதிக்குரிய விரிவான இலாப நட்டக் கணக்கு

(இ) செலுத்தத்தக்க வேதனாதிகள் தொடர்பான அட்டவணை

(ஈ) பொருளாதார பெறுமானத் தேய்வு தொடர்பான அட்டவணை

(உ) சட்டத்தின் 21 ஆம் பிரிவின்படி உரிய காலப்பகுதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதிசேர்வரி திருப்புதல்களில் வெளிப்படுத்தப்பட்ட வழங்கல் பெறுமதியின் பிரித்தவாறான விபரம்.

(ஊ) பின்வரும் வடிவத்தில் நிதிக்கூற்றுடன் கூடிய புரள்வின் கணக்கிணக்கம்.

| விடயம் | கணிப்பீடு செய்யும் நோக்கத்திற்கு ஏற்புடைய புரள்வு | | | நிதிச்கூற்றின் படியான மொத்தப் புரள்வு | குத்தகை தவணைக் கட்டணங்களின் மூலதனப் பகுதி |
|---|---|---|---|---|---|
| | சட்டத்தின் 2ஆம் பிரிவின்படி செலுத்தத்தக்க பெ. சே. வ | சட்டத்தின் 25 (அ) ஆம் பிரிவின்படி பெ. சே. வ | நிதிசாரா நடவடிக்கைகளுக்கு சாற்றப்படத்தக்க பெறுமதி சேர்ப்பு | | |
| | | | | | |
| மொத்தம் | | | | | |

EOG 01 - 0228

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.